# முத்துக்குமாரசாமி திடீர் விடுதலை!

விசாரணையின்றி கடந்த 16 மாதங்களாக சிறைவைக்கப்பட்டிருக்கும் 25 தமிழ் இளைஞர்களில் ஒருவரான திரு. த. முத்துக்குமாரசாமி 20-12-76 திங்கட்கிழமை பிற்பகல் திடீரென விடுதலை செய்யப்பட்டார். திரு. முத்துக்குமாரசாமி இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. தம்பித்துரையின் மகன் என்பதும், தமிழ்ஈழ

—4-ம் பக்கம் பார்க்க


சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2007 | மார்கழி 7 | துல்ஹஜ் 30 (22-12-76) புதன் | புத்தகம் 30 | இதழ் 70


- சிறையிருக்கும் இளைஞர்கருத்து
- தமிழ் இளைஞர் பேரவை தீர்மானம்
- பொதுச்சபை கூட்டுக!
- வதந்திகளுக்கு தலைவர்கள்மறுப்பு!

# பேச்சுவார்த்தை வேண்டாம்!

## விடுதலை இயக்கம் விரிவுபடுத்தப்படவேண்டும்!

## தமிழ் இளைஞர்களின் ஒருமித்த அபிப்பிராயம்!

வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் அடிப்படையில் சுதந்திரத் தமிழ் ஈழத்தை நிறுவுவது ஒன்றே ஒன்றைத்தவிர அதற்குக் குறைந்த எவ்விதமான பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவேண்டாமென்றும், சிங்கள அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளிலீடுபட்டு காலத்தை மேலும் வீணடிப்பதற்குப்பதிலாக விடுதலைப்போராட்டத்தை மேலும் விரைவுபடுத்தும் நடவடிக்கைகளிலீடுபடுமாறும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை தமிழ் இளைஞர்கள் விழிப்புணர்ச்சியுடன் ஒரே குரலில் கோரிவருகின்றனர்.

சிறைச்சாலையில் ஆண்டுக்கணக்காக விசாரணையின்றி வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களும் இதே கருத்தையே தம்மைச் சந்தித்தவர்களிடம் மிகவும் அழுத்தமாக வலியுறுத்தியுள்ளனர். தம்மைக் காரணமாகக் காட்டி தமிழ்ஈழ சுதந்திர இயக்கத்தை எந்தவிதத்திலும் பலவீனப்படுத்திவிடக்கூடாது என்று கூட்டணித் தலைவர்களிடம் தெரிவிக்கும்படி அவர்கள் கோரியுள்ளனர்.

அரசாங்கத்தின் பதவிக் காலம் 1977 மே 22ம் திகதியுடன் முடிவடைகிறது. இதை மேலும் மூன்று ஆண்டுகாலம் நீடிப்பது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்களுக்கும் அரசாங்கத்தைச் சேர்ந்த சில அமைச்சர்களுக்குமிடையே இரகசியப்பேச்சுவார்த்தை நடைபெறுவ

—3-ம் பக்கம் பார்க்க

## தமிழ்இளைஞர்பேரவை தீர்மானம்!

“ஈழத் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி, 1976 மே திங்கள் 14ம் நாள் வட்டுக்கோட்டை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ் ஈழ விடுதலைப் பிரகடனத்துக்குப் பாதகமான முறையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் நடந்துகொள்ளக் கூடாது எனவும், அவ்வாறு தமிழ்ஈழ விடுதலைப் பிரகடனத்துக்கு பாதகமான செயல்களில் ஈடுபடும் எவரும் தமிழினத்தின் துரோகிகளாகக் கருதப்படவேண்டும் எனவும் இச்சபை கருதுகிறது!”

இவ்வாறான தீர்மானம் 19-12-76 பிற்பகல் வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

## பேச்சுவார்த்தை வதந்திகளுக்கு அமிர்தலிங்கம் முற்றுப்புள்ளி!

‘சமசமாஜக்கட்சிப் பிரமுகர் திரு. ஹெக்டர் அபயவர்த்தன யாழ்ப்பாணம் வருகை தந்தபோது பாராளுமன்றத்தின் ஆயுள் காலத்தை நீடிப்பது பற்றி அரசாங்கத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையே பேச்சுவார்த்தை நடப்பதாக பேசியிருக்கிறார். இக்கூற்றில் எள்ளளவும்உண்மை இல்லைஎன்பதைதமிழர் விடுதலைக் கூட்டணியின்செயலதிபர் என்ற முறையில் நான் ஆணித்தரமாக மறுக்க விரும்புகிறேன்.

இவருடைய கற்பனையில் எழுந்தவிடயங்களை கூறியிருக்கிறாரேயன்றி அரசாங்கத்துக்கும் எமக்கும் எவ்வகையான பேச்சுவார்த்தையும நடைபெறவில்லை.

ட்ரயல்—அற் — பார் வழக்கைவாபஸ்பெறுவதற்காகவோ, மொழியுரிமைகள் பற்றிய சலுகைகளுக்காகவோ, நாம் தமிழ் ஈழத்தின் விடுதலைக்கோரிக்கையை கைவிடவோ, அரசாங்கத்தோடு ஒப்பந்தம் செய்யவோ மாட்டோம்!”

—இவ்வாறு தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள ‘அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொருளாளர்

—4-ம் பக்கம் பார்க்க

## பொதுச்சபையை உடனடியாகக் கூட்டும்படி த. இ. பேரவை கோரிக்கை!

இன்றைய அரசியல் நிலையில் பல முக்கிய பிரச்சினைகள் விவாதித்து முடிவு காணப்பட வேண்டியிருப்பதால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபையை உடனடியாகக் கூட்டும்படி கூட்டணியின் செயலதிபர்களை தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளை கோரியுள்ளது. இது சம்பந்தமான தீர்மானத்தை 19-12-76ல் நடைபெற்ற ஆண்டுக்கூட்டத்தில் இளைஞர் பேரவை எடுத்தது.

## தர்மரின் கூற்றும் வீரகேசரியின் திரிப்பும்!

“சிங்கள நாட்டில் தேர்தல் நடந்தாலென்ன நடக்காவிட்டாலென்ன—சர்வாதிகாரம் வந்தாலென்ன, சனநாயகம் நிலவினாலென்ன — எமக்கு அதுபற்றி அக்கறையில்லை. ஆனால் வட்டுக்கோட்டைப் பிரகடனத்தின் அடிப்படையில் எங்கள் தமிழ் ஈழத்தைப் பிரித்து எங்களிடம் ஒப்படைத்துவிட்டு எந்தக்கட்சியும் சிங்கள நாட்டை ஆளட்டும். தமிழ் ஈழத்துக்கு விடுதலை வழங்கும் வகையில அரசியல் சட்டத்துக்கு திருத்தம் கொண்டு வரப்படுமானால், சிங்கள நாடு தேர்தலை ஒத்திவைப்பதில் எமக்கு ஆட்சேபனை எதுவுமில்லை!”

—இதுதான் உடுவில் பா.உ. திரு. வி. தர்மலிங்கம் வீரகேசரி செய்தியாளர் திரு. அன்ரன் என்பவருக்கு கொடுத்த செய்தியாகும். இதை அப்படியே சொல்லுக்குச்சொல் வீரகேசரியில் பிரசுரிக்க அஞ்சிய அதன் ஆசிரியபீடம் ‘தமிழ்ஈழம்’, ‘பிரிவினை’, ‘தனிநாடு’ போன்ற சொற்களை விழுங்கிவிட்டு; “தமிழர் கூட்டணியின் மாற்றமுடியாத அடிப்படைக் கோரிக்கையை வழங்க அரசாங்கம் முன்வருமானால்” என்று திரு. தர்மலிங்கம் கூறியதாக ஒரு முன்பக்கத் தலைப்

—4-ம் பக்கம் பார்க்க

## தேசபக்தியுள்ளவர்கள் சிறையில்! தேசவிரோதிகளுக்கு விடுதலை!

தேசத்துக்கு மோசம் செய்து, அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாகக் காணப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த திரு. ஹைதராமணி, நாட்டின் ஆட்சியை ஆயுதமெடுத்துப்போர் புரிந்து சட்டவிரோதமாகக் கவிழ்க்கமுனைந்த பயங்கர குற்றத்துக்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த சேகுவேரா இயக்கத்தைச்சேர்ந்த விராஜ் பெர்னாண்டோ, ஆகியோரும் இன்னும் இது போன்ற குற்றங்களுக்காக சிறைத்தண்டனை அனுபவித்து வந்த 49பேரும் நீதி

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழத் தலைநகராம் திருக்கோணமலையில் தமிழிளைஞர் பாசறை அமைப்பு!

கடந்த 12-12-1976 ஞாயிறு மாலை திருக்கோணமலை தமிழ் இளைஞர் பேரவையின் பொதுச்சபை தெரிவு செய்யப்பட்டது. தொகுதியடங்கிலும் உள்ள பெருந்தொகையான இளைஞர்கள் வந்து கலந்துகொண்டனர். திரு. மூ. முருகையா தலைமையில் ஆரம்பம் ஆகிய இக்கூட்டத்தில் தமிழ் இளைஞர் பேரவையின் இடைக்கால அமைப்பாளர் திரு. இரகுபதி பாலசிறிதரன் சிறப்புச்சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அவர்பேசும் போது இளைஞர்கள் மத்தியில் கட்டுப்பாடும் ஒழுங்கும் அவசியம். எந்தநேரத்திலும் எதையும் எதிர்பார்த்திருக்கவேண்டும் இளைஞர்கள். அதனால் பலப்படுத்துங்கள் அமைப்பை, அமைப்பு பலம் உள்ள இளைஞர்கள்தான் இன்று எமக்கு தேவை என்றார்.

திரு. அ. தங்கத்துரை மூதூர் நாடாளுமன்ற உறுப்பினர் பேசும்போது எதையும் நாம் தியாகம் செய்யத் துணிந்துவிட்டால், நாம்தான் பெரும்பான்மை சிங்களவர்கள் சிறுபான்மையாகிவிடுவர். எனவே சிறையிலிருக்கும் இளைஞர்களை விடுதலை செய்யும்படி தலைவர்களை தூண்டுவதைவிட்டு இன்றும் ஆயிரம் ஆயிரமாய் இளைஞர்கள் சிறைக்கு போவதற்கான திட்டங்களை தரும்படி இளைஞர்கள் தலைவர்களிடம்கேட்கவேண்டும் என்றார்.

திரு. பா. நேமிநாதன் பா. உ. பேசுகையில் கூட்டணி திட்டங்களுக்கு செயலுருவம் கொடுக்கும் இளைஞர் பேரவையில் ஆயிரம் ஆயிரமாய் இளைஞர்கள் வந்து சேர்ந்து ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றார்.

திருகோணமலை கூட்டணிச்செயலாளர் திரு. வீரசுப்பிரமணியம் பேசும்போது மலையகத்தில் இருந்தும் மற்றும் பல பகுதிகளில் இருந்தும் வேலையற்ற இளைஞர்கள் திருகோணமலை மண்ணில் வந்து குடியேறவேண்டும். இங்குவேண்டிய நிலம் உண்டு. வளம்உண்டு மேற்கொண்டு உதவ நாம் தயாராய் இருக்கின்றோம் இதற்கு உதவும் படி ரகுபதி பாலசிறிதரனைக் கேட்டுக்கொண்டார்.

அவரைத்தொடர்ந்து திருகோணமலைத் தொகுதி தமிழ் இளைஞர்பேரவை அமைப்பாளர் மு. பாலசுந்தரம் பேசுகையில் "இந்த நாட்டில் நாம் அரசுடன் செய்துகொண்ட பேச்சு வார்த்தைகள் ஒப்பந்தங்கள் அனைத்தும் பயனற்றவையாகப் போனபின்தான் நாம் ஒரு முடிந்த முடிவுடன் தமிழீழ விடுதலைப் போரில் கலந்துள்ளோம். இவ்வளவு காலமும் நாம் அரசியல் நடத்தினோம் இப்போ நாம் விடுதலை பெறப்போரிடுகின்றோம். அண்ணன் காசிஆனந்தன் சொன்னதுபோல்'கூப்பி கூப்பிடுவீரர்களை இன்னும் எத்தனை நாளைக்கு இந்தக் கூண்டுக்கிளி நிலை' எனவே வீரர்களை கூப்பிடுகின்றோம்; கோழைகளை வீரராக்க கூப்பிடுகின்றோம்; வாருங்கள் இயக்கத்தில் அணிதிரளுங்கள்'' என அறைகூவல் விடுத்தார்.

இதைத்தொடர்ந்து புதிய நிர்வாகிகள்தெரிவு நடைபெற்றது. அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த புகழ் பெற்ற சட்டத்தரணிகளான திரு. பொ. ரங்கநாதன் அவர்களும் திரு. சி. சச்சிதானந்தன் அவர்களும்வந்து கலந்து இந்நிகழ்ச்சியைசிறப்படையவைத்தனர்.

பொதுச்சபை அலுவலாளர்கள் வருமாறு:- தலைவர்: திரு; ந சிறீஸ்கந்தராசா உபதலைவர்: திரு. ச. கோபாலகிருஷ்ணன், செயலாளராக அமைப்பாளர் மு. பாலசுந்தரம், உபசெயலாளர்கள்: திரு. கோ. சுந்தரமகேசன். பொருளாளர் திரு. மூ. முருகையா சட்ட ஆலோசகர்களாக: சட்டத்தரணிகளான திருவாளர்கள்: பொ. ரங்கநாதன் இரா. சம்பந்தர், சி. சச்சிதானந்தம் ஆகியோர்தெரிவு செய்யப்பட்டனர் அனைத்து தெரிவுகளும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது கூடவே (11) பதினெரு பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## கொழும்பில் கூட்டணி உறுப்பினர் சேர்க்கும் இயக்கம் தீவிரம்!

தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ் மகளிர்பேரவை தமிழ் இளைஞர் பேரவை ஆகியவற்றின் கொழும்புக் கிளையினர் கொழும்பு மாநகரத்தில் வீடு வீடாகச்சென்று இயக்கத்துக்கு அங்கத்தவர்களைச்சேர்க்கும் முயற்சியில் கடந்த ஒரு திங்களாக ஈடுபட்டுள்ளார்கள். இவர்களுக்கு கொழும்புப்பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் மகிழ்ச்சியான ஆதரவும் வரவேற்புக்களும் தந்து உற்சாகமூட்டி வருகின்றனர். தொடர்ந்தும் இவர்கள் இல்லம் தோறும் சென்று அங்கத்தவர்களை சேர்ப்பதுடன் தனிநாட்டு பிரசாரங்களையும் மேற்கொள்வார்கள். இவர்கள் மூன்று மாத சந்தாவை பெற்றுக்கொள்வதுடன், ஒவ்வொரு 3 மாதங்களுக்கு ஒருமுறை மீண்டும் அதே வீடுகளுக்குச்சென்று அரசியல் நிலைமைகளை விளக்குவது எனவும் முடிவுசெய்துள்ளனர்.

## சம்மாந்துறை 11, 13 கிராமம் கூட்டணிக் கிளை!

சம்மாந்துறைத்தொகுதியின் 11ம், 13ம் கிராமங்களில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் கிளை அண்மையில் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் தலைவராக திரு. ச. கதிரையாண்டியும், துணைத்தலைவராக ஞா. இரத்தினசிங்கமும், செயலாளராக க. கருணாகரனும், துணைச்செயலாளராக த. சின்னத்துரையும். பொருளாளராக சி. சின்னையாவும் செயற்குழு உறுப்பினர்களாக வயிரமுத்துகணேஸ், பூ. சுப்பிரமணியம், க. வேலுப்பிள்ளை, பொ. சாமித்தம்பி, சீ. கிருஷ்ணபிள்ளை, மா. ஜெகதீசன், க. புண்ணியமூர்த்தி, க. குமாரசாமி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## காணிகளை பறிகொடுத்த மல்வத்தை தமிழர்களின் கண்ணீர்க் கதை!

1954ம் ஆண்டு தமிழ் சிங்கள புதுவருட தினத்தன்று வீரமுனைக் கிராமத்திலே—ஒருசில தமிழர்கட்கும் முஸ்லீம் சகோதரர்கட்கும் நடந்த 'கலவரத்தின் காரணமாக — வீரமுனைக் கிராமமே எரித்துச் சாம்பலாக்கப்பட்டது. இது நாடு நன்கறிந்த விடயமாகும். அன்றுமுதல் வீரமுனையை விட்டு அனாதைகளாக வெளியேறிய நாங்கள் மல்வத்தையில் வந்து குடியேறினோம்!

மரத்தால் வீழ்ந்தவனை மாடுவெட்டுவது போன்று 1962ல் நடந்த தமிழ் சிங்கள இனக்கலவரம் காரணமாக மீண்டும் ஒருமுறை சிங்களவர்களால் மல்வத்தைக் கிராமமும் தீக்கு இரையாக்கப்பட்டது. சோதனை மேல் சோதனை போதுமடாசாமி என்ற சினிமா பாடல் போன்று மீண்டும் மீண்டும் இந்தத் தமிழர்கள் பரம ஏழைகளாகக்கப்பட்டார்கள்—

இதே வேளையிலே வீடுகளை இழந்து தெருவிலே நிற்கின்ற நேரத்திலே தான் தேடிய செல்வங்களை எல்லாம் பறிகொடுத்து — ஒரு வேளைச் சாப்பாட்டுக்கே அல்லல்படும்போது அன்று காடுவெட்டி, கடும்பாடுபட்டு உருவாக்கிய நிலம்தான். இன்று சிங்களவர்களால் பலாத்காரமாகப் பறிக்கப்படும் மலையடிவட்டை, தொட்டாச்சுருக்கிவட்டைக் காணிகளாகும்.

இந்த இரண்டு வட்டைகளுமே. இப்பகுதி வாழ் தமிழ் பேசுமினத்துக்கு உள்ள காணிகளாகும்-வேறு நிலங்கள் இல்லாத இந்த அனாதைத் தமிழர்களின் உயிருக்கு மேலாக மதிக்கப்படுகின்ற இந்தக் காணிகளும் பறிபோய்விட்டால் இந்த ஏழைகளின் நிலை என்னாகும் என்பதை ஆண்டவனுவது சிந்திக்க வேண்டுகிறோம்!

தற்போது எமது காணிகளில் பலாத்காரமாக சிங்களவர்களை குடியேற்றி— அந்த இடத்திற்கு — (சோமரத்னபுர) என்று பெயருமிட்டு — அவர்களுக்கு பொலீஸ் காவலும் கொடுக்கப்பட்டுள்ளது—இந்த அநியாயத்தை செய்வது அரசாங்கமும், அம்பாறை மாவட்ட அரசியல் அதிகாரமும்தான் என்பது இன்று தெட்டத்தெளிவாகி விட்டது.

இந்த அக்கிரமத்தை எதிர்த்துப் போராட இப்பகுதியிலே உள்ள தமிழ் பேசும் இனம் ஒன்றுபட்டு தமிழர் கூட்டணியின்கீழ் அணிதிரண்டுவிட்டார்கள்! 20 ஆண்டு காலமாக விவசாயம் செய்துவந்த இந்த நிலத்தை இழந்து இந்த உலகத்திலே நாங்கள் உயிர்வாழ்வதற்கு உறுதுணையாக இருந்த இந்தக் காணியும் இல்லாது போனால் — இந்த நாட்டிலே எங்களுக்கு வாழ்வில்லை, வளம் இல்லை என்பதை உணர்ந்த மக்கள் கொதிப்படைந்துவிட்டார்கள். சாவின் எல்லைக்கே தங்களை தாங்களே தயார்படுத்திக் கொண்டார்கள். காலத்துக்குக்காலம் — சோதனைக்கு மேல் சோதனை அனுபவித்த இம்மக்கள். சாவா—அல்லது வாழ்வா எனும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள்—

**வே. தங்கத்துரை**
(துணைத்தலைவர் த. வி. கூ.
மல்வத்தைக் கிளை)

கோவலனை இழந்த கண்ணகி எவ்வாறு சினம் கொண்டெழுந்து மதுரை மாநகரத்தை எரித்துச் சாம்பலாக்கினளோ — அதேபோன்று காணிகளை இழந்த மல்வத்தை மக்கள் கண்ணகிகோலம் போடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள் என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

எனவே இந்த அநியாயத்தை தட்டிக்கேட்டு குரல் கொடுக்க. எமது வழிகாட்டியான தமிழர் விடுதலை கூட்டணியும் அதன் தலைவர்களும் தயாராக வேண்டுமென மல்வத்தை வாழ் தமிழ் பேசுமினத்தின் சார்பாக மிகமிக பணிவன்போடு வேண்டுகிறோம்!

## திருக்கோணமலை தமிழ் சட்டத்தரணிகளுக்கு தமிழ் இளைஞர் பேரவை வேண்டுகோள்!

தமிழினத்தின் விடுதலைக்கு போராடும் தமிழ் இளைஞர்கள் ஆட்சியாளரால் அநீதியான முறையில் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்படும்போது, அவர்கள் சார்பில் தமிழ்பேசும் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி இலவசமாக வாதாடுவதும், சட்ட ஆலோசனை வழங்குவதும் தமிழ் சமுதாயத்துக்கு அவர்கள் செய்யவேண்டிய இன்றியமையாத கடமையாகும். கொழும்பிலும் யாழ் நகரிலும் இது [illegible] பெற்றபோதிலும், திருகோணமலையில் ஓர் இரு தமிழ் சட்டத்தரணிகளே இதுவரை தமிழ் இளைஞர்களுக்கு உதவிபுரிய முன்வந்துள்ளனர். இவர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கும் அதே வேளையில், திருகோணமலையிலுள்ள சகல தமிழ் பேசும் சட்டத்தரணிகளும், எதிர்காலத்தில் தமிழர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நீதிமன்றத்துக்கு வரும் போது தாமாகவே முன்வந்து இலவசமாக ஆஜராகி, நீதியை நிலைநாட்ட முன்வர வேண்டுமென்றும், திருகோணமலையைக் காப்பாற்ற ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்றும் திருகோணமலை நீதிமன்றத்துக்கு தமிழ்பேசும் சட்டத்தரணிகளை திருகோணமலை தமிழ் இளைஞர் பேரவை கோரியுள்ளது:

16-11-76ல் திருகோணமலை தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்புக்கூட்டம் அமைப்பாளர் மு. பாலசுந்தரம் தலைமையில் கூடி மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தது. இக்கூட்டத்தில், மூ. முருகையா, மு. இ. யோகேந்திரன், ம. சுந்தரமகேஸ், ந. சிறீஸ்கந்தராசா ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "1980க்கு முன்னர் தமிழீழத்தை மீட்கவேண்டும்!"

## அம்பிட்டி தேசிய குருமடத்தில் சுதந்திரன் ஆசிரியர் பேச்சு!

"1980ம் ஆண்டுக்கு முன்னர் ஈழத்தமிழினம் இழந்த தனது தாயகத்தை—தமிழ் ஈழத்தை மீட்கவேண்டும். இதற்கமைய நாம் திட்டமிட்டுப் பணியாற்றவேண்டும். தமிழ் இளைஞர்கள் இனிய தங்கள் தாய் நாட்டை விடுவிப்பதற்காக எத்தகைய தியாகத்துக்கும் தயாராக வேண்டும். இரத்தம் சிந்தாப் புரட்சியின் மூலம் தமிழ் ஈழத்தை அடையமுடியுமானால் அனைவருக்கும் நல்லதுதான். ஆனால் அது முடியாதுபோனால் நமது இரத்தத்தினால் நமது தாயகத்தைக் குளிப்பாட்டியேனும் அதனை சிங்கள ஏகாதிபத்தியத்திலிருந்து விடுவித்தேயாக வேண்டும். தமிழ் ஈழத்தை மிகவிரைவில் நாம் மீட்காவிடின் நமது மொழியும் இனமும் இந்நாட்டில் இருந்த இடம் தெரியாமல் பூண்டோடு மறைந்துவிடும்!"

—இவ்வாறு கண்டி — அம்பிட்டி தேசிய குருமடத்தில் ஞானப்பிரகாசர் தமிழ்க் கழகத்தின் ஆதரவின் கீழ் 5.12.76ல் நடைபெற்ற கலைவிழாக் கருத்தரங்கின்போது 'மொழியும் வாழ்வும்' எனும் தலைப்பில் சிறப்புரையாற்றிய சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் குறிப்பிட்டார்,

இக்கருத்தரங்கின் போது வண. பிதா. சிங்கராயர் அடிகளார், வண. பிதா. ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார், வண. பிதா. பேர்னுட் அடிகளார் ஆகியோரும் பங்குபற்றினர். இக்கூட்டத்தில் சுதந்திரன் ஆசிரியர் மேலும் கூறியதாவது:-

"ஒரு மொழி சாகாமல் வாழ்வதற்கு அந்தமொழியைப் பேசும் மக்கள் கூட்டம், அதாவது இனம் ஒன்று வேண்டும். அந்த இனம் வாழ்வதற்கு அதற்கென நிலம் ஒன்று இருக்கவேண்டும். அந்த நிலத்தை அந்த இனமே ஆளவேண்டும். அப்போதுதான் மொழியும் வாழும். இனம் வாழ்ந்தால் தான் மொழி வாழும். இனம் வாழ அதற்கென ஒரு நாடு—தாயகம் வேண்டும்.

தமிழ் நாடு தனிநாடாக விளங்கிய காலத்தில்தான்—தமிழன் தன்னைத்தானே ஆண்டிருந்த காலத்தில் தான்—தமிழும் உயர்ந்தோங்கி நிமிர்ந்து நின்றது. தமிழில் சிறப்புமிகு இலக்கியங்கள் யாவும் படைக்கப்பட்டன. என்று தமிழ்நாடு தாழ்ந்ததோ — என்று தமிழன் தனது அரசையும் கொடியையும் முடியையும் இழந்தானோ அன்றே தமிழ் மொழியும் வீழ்ச்சியுற்றது. எனவே தமிழ்மொழி வாழத் தமிழன் வாழவேண்டும். தமிழன் வாழ அவன் தன்னைத்தானே ஆளவேண்டும்.

1619ம் ஆண்டுவரை தமிழன் ஆண்டிருந்த பூமியான தமிழ் ஈழத்தை — 1833ம் ஆண்டுவரை தனி நிர்வாகத்தின்கீழ் இருந்த தமிழர் தாயகத்தை—மீட்டு, அங்கு தமிழ்பேசும் மக்களின் ஆட்சியை நிலைநிறுத்தவே இன்று நாம் போராடுகிறோம். நாம் எமது இழந்த மண்ணை மீட்கப் போராடுகிறோமே தவிர சிங்கள நாட்டைப் பிரிக்கும்படி கோரவில்லை!

சிங்கள மக்கள் எமக்கு விரோதிகள் அல்லர்; ஆனால் அவர்கள் எங்களை அடிமைகளாக அடக்கியொடுக்குவதை நாம் அனுமதிக்க முடியாது. அடிமைத்தனத்தை துடைத்தெறிந்து தமிழ் ஈழத்தை மீட்க தமிழ் இளைஞர்கள் புரட்சியிலிறங்கத் தயாராக வேண்டும்!

திரு. கோவை மகேசன் தமது பேச்சையடுத்து, சபையோரின் ஏராளமான கேள்விகளுக்கு பதிலளித்தார். ஒரு கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் தமிழ்ஈழம், சாதி மத, பிரதேச வேறுபாடுகள் அற்ற ஒரு சமதர்மப் பூமியாக விளங்கும் என்றார்.

வண. பிதா ஜேம்ஸ் பத்திநாதர் கருத்துத் தெரிவிக்கையில் தனிநாடு நிறுவுவதற்கு இன்றுள்ள ஆயுதம் போதாது என்றும், திட்டமிட்டு காலஎல்லை வகுத்துச் செயற்பட வேண்டுமென்றும் கூறினார்.

கண்டி அசோகா வித்தியாலய அதிபர் திரு. நடராஜா மலையகத் தமிழர்களின் பிரச்சினைபற்றி எழுப்பிய கேள்விக்கு திரு. கோவை மகேசன் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"மலையகத் தமிழர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வந்து குடியேற வேண்டும். சுதந்திரத் தமிழ் ஈழ அரசில் தமிழ் மக்கள் அனைவரும் பூரண குடியுரிமையுடன் வாழமுடியும். இலங்கையில் எந்தப்பகுதியில் வாழும் தமிழனும் தமிழ் ஈழ அரசில் பூரணகுடியுரிமைக்கு தகுதியுடையவனே. மலையகத் தமிழர்களை இருகரம் நீட்டி அணைத்துக் கொள்ளத் தமிழ் ஈழம் தயாராக இருக்கிறது. தமிழ்ஈழத்தில் வந்து குடியேறுவதொன்றின் மூலமே மலையகத் தமிழர்களும் மனிதர்களாக வாழமுடியும்!"

வணபிதா. சிங்கராயர் அடிகளார் கருத்துத்தெரிவிக்கையில்— "தமிழர் விடுதலைப்போராட்டத்தில் நாம் பார்வையாளராக இராமல் பங்காளர்களாக மாறவேண்டும். வழக்கில் வெற்றி பெற்று. தமிழ் ஈழம் திரும்பிய தலைவர் அமிர்தலிங்கத்துக்கு மாலைபோட முன்வந்த கும்பல், அதே தலைவருக்கு சிங்களப்பொலிஸ்காரன் ஒருவன் அடித்த போது பயந்து ஒதுங்கியது விசனிக்கத் தக்கது. என்றுவது ஒரு நாள் பிரியும் நம் உயிர், தமிழ் இனத்தின் உயிர் வாழுதலுக்காகப் பிரிவது சிறந்தது" என்றார்.

கருத்தரங்கு தமிழ் ஈழத் தேசிய கீதத்துடன் நிறைவெய்தியது.


## வரலாற்றுத் திரிப்பு!

கந்தளாய் குளத்தை கட்டியவன் குளக்கோட்டனா? அக்கரபோதியா? அல்லது குளக்கோட்டனுக்கு இன்னுமோர் பெயர் இரண்டாம் அக்கரபோதியா?

தேவார புகழ் பெற்ற கோணை நாதர் ஆலயத்தை பராமரிப்பதற்கு ஏழு ஊர்களில் விவசாய நிலங்களைஏற்படுத்தி அவற்றுக்குநீர்ப்பாசனம்செய்ய வசதியாக கந்தளாய் குளத்தை கட்டி வைத்தான் குளக்கோட்ட மன்னன். அவன் செய்யும் திருப்பணியை கண்டு மனம் பொறுக்காத கண்டி அரசன் பாண்டுவின் மனைவி ஒரு படையை அனுப்பி திருப்பணியை தடைசெய்து குளக்கோட்டன் மன்னனையும் நாட்டை விட்டு விரட்டும்படி உத்தரவிட்டு இருந்தாள். வந்தபடை குளக்கோட்டனின்சேனையை கண்டு மருண்டு பின் வாங்கியது. இதற்கு ஆதாரமாக சரித்திர சான்றுகள் கல்வெட்டுகள் இன்றும் சாட்சி பகர்கின்றன.

இது இப்படி இருக்க கந்தளாய் குளத்தின்அணைக் கட்டில் தற்போது ஓர் பெயர்ப் பலகை போடப்பட்டுள்ளது. கந்தளாய் குளத்தை கட்டியவன் இரண்டாம் அக்கரபோதி மன்னன் என்று இது வேடிக்கையா? விபரீதமா? தமிழர்களின் வரலாற்றை திசை திருப்பிவிடும் நோக்கமா? தமிழரின் கலாச்சாரத்தையும் தனித்துவத்தையும் அரசு திட்டமிட்டு அழிக்கின்றது. என்பதற்கு இது மற்றுமோர் உதாரணம்.

—தகவல்—மு. பாலசுந்தரம்



● மட்டக்களப்பு மாநகரசபை, அமைச்சராக விளங்கிய அமரர் திருச்செல்வத்துக்கு வரவேற்புபசாரம் அளித்தபோது மாநகரசபை உறுப்பினராக இருந்த மட்டுநகர் முத்தழகுவுடன் அமரர் கைகுலுக்கும் காட்சி இது.

## சந்தணப் பொட்டாய் ஆனவரே!

— மட்டுநகர் முத்தழகு —

சட்டத்துறையின் பட்டங்களால் — பலரும்
சட்டையின் போர்வைக்குள் இருந்தாலும்
விட்டுவிடாத வாதத்தால் — தமிழர்
விடுதலை வேட்கையின் தீயினிலே

சிந்தனைத் தீயாய் வெந்தவரே! — தமிழின்
"சந்தணப் பொட்டாய் ஆனவரே!"
வந்தனைக் குரியநூல் களெல்லாம் — கூறும்
வணக்க முறையிலும் சிறந்தவரே!

சிங்கள மக்களும் சிரம்தாழ்த்த—பாரதச்
சந்தணக் கட்டைகள் மணம்வீச
மங்கள மாமங்கக் கிழக்கினிலே! — உதித்த
மலர்களே! எங்களின் காணிக்கையே!

## பேச்சுவார்த்தை வேண்டாம்..

—1-ம் பக்கத் தொடர்

தாக நாளேடுகள் சிலவற்றில் வெளிவந்த செய்தி தமிழ் மக்களிடையே—குறிப்பாக தமிழ் இளைஞர்களிடையே — குழப்பத்தையும், கொந்தளிப்பையும் தோற்றுவித்துள்ளது.

இச்செய்தி ஒரு கட்டுக்கதையென்றும், அரசுக்கும் கூட்டணிக்குமிடையே இதுவரை எவ்விதமான பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லையென்றும் வட்டுக்கோட்டைப்பிரகடனத்தின் அடிப்படையில் தமிழ் ஈழ அரசை மீள்விப்பதொன்றே கூட்டணியின் குறிக்கோளாக இருக்கும் என்றும்கூட்டணியின் சார்பில் அதன் செயலதிபர் நாவலர் அமிர்தலிங்கம் திட்டவட்டமாக இதை மறுத்திருக்கிறார்.

இருந்தபோதிலும் இளைஞர்களின் மனம் இன்னும் அமைதியடையவில்லை. அவர்கள் தலைவர்களிடம் இது பற்றியே கேள்விகள்கேட்டு வருகிறார்கள்! கடந்த புதன் கிழமை (15-12-76) கொழும்பிலும் 18-12-76 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் கூட்டணிக் காரியாலயத்திலும் நடந்த கருத்தரங்கின் போதும், அதே தினம் திருக்கோணமலையில் நடைபெற்ற அமரர் திருச்செல்வம் இரங்கற்கூட்டத்திலும் கலந்து கொண்ட திருவாளர்கள் சி. கதிரவேற்பிள்ளை, வி. என். நவரத்தினம், வி. தர்மலிங்கம், அ. அமிர்தலிங்கம், வீ. ஆனந்தசங்கரி, பா. நேமிநாதன் ஆகிய தலைவர்களிடமும் இது சம்பந்தமாக இளைஞர்கள் கேள்விக்கணைகளைத் தொடுத்திருக்கிறார்கள் இக்கருத்தரங்குகளில் பேச்சுவார்த்தை பற்றிய வதந்திகளை தலைவர்கள் முற்றாக மறுத்துள்ளனர்.

"இன்றைய அரசாங்கத்துடனும் சரி, அல்லது வருங்காலத்தில் யூ. என். பி. அரசாங்கத்துடனும் சரி அற்ப சலுகைகளுக்காகவும், அரசியல் சட்டரீதியான உரிமைகளுக்காகவும் நாம் பேச்சுவார்தை நடத்தக் கூடாது; வட்டுக்கோட்டை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பிரகடனப்படி தமிழ் ஈழத்தின் இறைமையையும், சுதந்திரத்தையும் மீட்பது ஒன்று தவிர — அதற்குக் குறைந்த எந்த நிலைக்கும் நாம் இனி கீழிறங்க முடியாது; இன்றைய நிலையிலிருந்து நாம் விட்டுக்கொடுத்தால்நம்விடுதலைப்போராட்டமே பிசுபிசுத்து விடும்; இயக்கம் பலவீனமடைந்துவிடும்; இது தான் நமது கடைசி எழுச்சி; திரும்பிப்பார்ப்பதற்கோ, தங்குமடத்திற்கோ இனி இடமேயில்லை!"

இவ்வாறு தமிழ் இளைஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

"நாம் எவ்விதமான துன்பங்களையும் தாங்கவும், வேண்டுமானால் தூக்கு மேடை ஏறவும் தயார்; எம்மைக்காரணமாகக் காட்டி விடுலைப்போராட்டம் பேச்சுவார்தைகளினால் எந்தவிதத்திலும் பலவீனப் பட்டுவிடக் கூடாது; தமிழர் விடுதலைக் கூட்டணி எம்மை விடுதலை செய்வதில் அக்கறை காட்டுவதைவிட இனத்தை விடுவிப்பதில் தீவிர அக்கறை காட்டவேண்டும் என்பதே எமது அவா" என்று சிறையிருக்கும் தமிழ் இளைஞர்கள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

# அற்ப சலுகைகளுக்காக ஐ.தே.கவுடன் ஒட்டியிருக்கும் தேவநாயகமா கூட்டணிக்கு உபதேசம் செய்வது?

அற்ப சலுகைகளுக்காக ஐ. தே. கட்சியுடன் மானம் ரோசமற்று ஒட்டியுறவாடும் கல்குடா பா. உ. திரு, தேவநாயகம் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு உபதேசம் செய்யப்புறப்பட்டிருப்பது விந்தையாக இருக்கிறது. பொதுத்தேர்தல் ஒன்றுவரும்—அதில் ஐ. தே. க. ஆட்சிவரும் —வந்தால் நான் மந்திரி என்று இலவு காத்த கிளிபோல காத்திருக்கும் திரு. தேவநாயகத்துக்கு ஒருவேளை தேர்தல் வரா விட்டால்...என்று எண்ணும் போது வயிற்றைக் கலக்கு வது எமக்குத் தெரியும். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இத்தகைய 'கலக்கம்' எதுவும் கிடையாது! கூட்டணிக்கு திரு. தேவநாயகத்தின் புத்திமதி தேவையுமில்லை! தமிழர்கூட்டணிக்குப் புத்திசொல்லிக் கொண்டிருப்பதை விட அடுத்த பொதுத்தேர்தலில் அவர் கட்டுக்காசையாவது காப்பாற்ற முயற்சிப்பதே புத்திசாலித்தனமானது என்று கூறிவைக்கிறோம்.

"தமிழர் விடுதலைக்கூட்டணியின் தனிநாட்டுக் கோரிக்கையை இந்த அரசாங்கமோ, பிரதம மந்திரியோ என்றும் வழங்கப் போவதில்லை; பொதுத்தேர்தலை ஒத்திவைக்க அரசுக்கு தமிழர் கூட்டணி உடந்தையாக இருந்தாலும் தனிநாட்டுக் கோரிக்கையை அரசாங்கம் வழங்கப் போவதில்லை; அற்ப சலுகைகள் வேண்டுமென்றால் கிடைக்கும்'' என்று கூறியிருக்கிறார். திரு. தேவநாயகம் (வீரகேசரி 20-12-76)

அதாவது அவரது பார்வையில், தனிநாடு கோரிக்கையின் முன் ஏனைய வை அனைத்தும் 'அற்ப சலுகைகளே!' தரப்படுத்தல் நீக்கப் படுதல், அரசியல் சட்டத்தில் தமிழுக்கு இடமளித்தல், சிங்களக் குடியேற்றத்தை தடுத்துநிறுத்தல், இவை யனைத்தும் தனிநாடு கோரிக்கையின் முன் வெறும் அற்ப சலுகைகளே, இந்த அற்ப சலுகைகளைத்தாம் தமது ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்ததும் தமிழருக்கு வழங்க விருப்பதாக அதே அறிக்கையில் திரு. தேவநாயகம் கூறியிருக்கிறார்.

திரு. தேவநாயகம் அவர்களே! தமிழர்கள் இன்று வேண்டி நிற்பது சிறீலங்கா சுதந்திரக்கட்சியிடமிருந்தோ, அல்லது உமது ஐ. தே. கட்சியிடமிருந்தோ மேற்கண்ட அற்ப சலுகைகளையல்ல—

அவர்கள் கோருவது தமிழ் ஈழத்தின் சுதந்திரம் ஒன்றே ஒன்றுதான்!

## பிணையிலேயே விடுதலை!

புலோலி வங்கிக்கொள்ளை தொடர்பாக விடுதலை செய்யப்பட்ட இளைஞர்கள் அனைவரும் பிணையிலேயே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். பிணையின்றி விடுதலை செய்யப்பட்டதாக 19-12-76 சுதந்திரனில் வெளிவந்த செய்தி தவறானதாகும்.

## முகமது அலி ஜின்னா நூற்றாண்டு நிறைவு விழா

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளை இன்று புதன் கிழமை (22-12-76) மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி லோறிஸ்வீதியிலுள்ள(புனித மரியாள் கோவிலுக்கு எதிர் புறம்) எண் 51 தாங்கிய இல்லத்தில் முகமது அலி ஜின்னா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடுகிறது. விழாவிற்கு த. வி. கூ. கொழும்புக் கிளைத் தலைவர் ஈழவேந்தன் தலைமை தாங்குகிறார்.

டாக்டர். எம். சி. எம். கலீல் "என் நோக்கில் ஜின்னா (எனும் தலைப்பில் உரை நிகழ்த்துவார். இக்கூட்டத்தில் திரு. கே. சி. நித்தியானந்தா அவர்கள் "எமது எதிர்காலம் என்ன'' எனும் தலைப்பில் உரைநிகழ்த்துவார்.

## முற்றுப்புள்ளி...

—1-ம் பக்கத் தொடர்

களில் ஒருவரும் கூட்டணித் தலைவர்களில் ஒருவருமான கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்களும் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் அரசாங்கத்துக்குமிடையே பேச்சு வார்த்தை நடைபெறுவதாக பரப்பப் பட்டுவரும் வதந்தியை முற்றாக மறுத்துள்ளார்.

தமிழர் கூட்டணியைச் சேர்ந்த எந்தத் தலைவரும் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லையென்று அவர் தெரிவித்துள்ளார்.

## முத்துக்குமாரசாமி...

—1-ம் பக்கத் தொடர்

விடுதலையில் தீவிர நாட்டமுள்ள இளைஞர் என்பதும் தெரிந்ததே.

1972 மே 18ல் குடியரசு நாளை எதிர்த்துத் துண்டுப் பிரசுரம் விநியோகித்ததற்காக முதன்முதலில் கைது செய்யப்பட்ட இவர், 1972 நவம்பரில் விடுதலை செய்யப்பட்டார். இரண்டாவது தடவையாக 9-3-73ல் கைது செய்யப்பட்ட இவர், மீண்டும் 1974 செப்தெம்பரில் விடுதலை செய்யப்பட்டார். 1975 ஆகஸ்டில் யாழ்மேயர் துரையப்பா கொலையைத் தொடர்ந்து மறுபடியும் மூன்றாவது முறை கைதான இவர், 16 மாதங்களின் பின்னர் மீண்டும் 20-12-76ல் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## தர்மரின் கூற்றும்

—1-ம் பக்கத் தொடர்

ப்புச் செய்தியை 18-12-76 சனிக்கிழமை வெளியிட்டிருந்தது. வீரகேசரியின் இச் செய்தி தமிழ் மக்களிடையே ஒரு மயக்கத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்திவிட்டதுடன் திரு. தர்மலிங்கம் அவர்கள் மீது ஒரு தப்பபிப்பிராயத்தையும் ஏற்படுத்தி விட்டது.

## கற்பிட்டி தமிழ் பேசும் இளைஞர் மன்றம் தொடக்கம்

கற்பிட்டிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை தமிழ்ப்பேசும் இளைஞர் மன்றக் கிளையொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கற்பிட்டி தமிழ்பேசும் இளைஞர் மன்றத் தலைவராக சி. அந்தோனிப்பிள்ளையும், உபதலைவராக யூ. எச். எம். இக்பாலும், செயலாளராக அ. ஜே. முத்துத்தம்பியும், உபசெயலாளராக எம். ஐ. காதரும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். நிர்வாக அங்கத்தவர்களாக மேற்குறிப்பிட்ட நான்கு பேருடன் சி. என். பாக்கியம், த. மாரித்து, எம். தியாகராஜா, என். இரத்தினம், எஸ். கிறிஸ்டோபர், பி. எம். காதர், எஸ். செல்லத்துரை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## தேசபக்தியுள்...

—1-ம் பக்கத் தொடர்

யமைச்சின் உத்தரவின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் சென்ற கிழமை!

ஆனால் தேசபக்தியின் காரணமாக, தமிழ்மொழியின் உரிமைகளையும், தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தையும் கோரியதற்காக வெலிக்கடை சிறையில் ஆண்டுக்கணக்காக விசாரணையின்றி அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் சிறையிலேயே சாகடிக்கப்படுகிறார்கள். அவர்களை விடுதலை செய்வதுபற்றி பேச்சுமூச்சு இல்லை!

திரு. பொ. சத்தியசீலனும் திரு. பொ. வே. திசை வீரசிங்கமும், 1973ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகவும் காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா, வண்ணை ஆனந்தன் போன்ற ஏனைய இளைஞர்கள் இரண்டாவது தடவையாக 1975 ஆகஸ்ட் திங்களிலிருந்தும் நீதி விசாரணையின்றி சிறையில் தொடர்ந்து வைக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

தேசபக்தி—மொழிப்பற்று—உரிமையுணர்வு கொண்ட தமிழ் இளைஞர்களுக்கு விசாரணையற்ற தொடர்ந்த சிறை; தேசவிரோதிகளுக்கும் தேசத்தை மோசடி செய்தோருக்கும், ஆயுதப் புரட்சியிலீடுபட்டோருக்கும் விடுதலை; இதுதானா சிறிமா அம்மையாரின் செங்கோல் என்று கேட்கிறார்கள் நடுநிலையாளர்கள்.

## விடுதலை வேண்டி பிரார்த்தனை

சிறைவாழும் இளைஞர் விடுதலைக்காக மகளிர் பேரவை கொழும்புக்கிளை நடத்தும் வாராந்தப் பிரார்த்தனை இவ்வாரம் திம்பிரிக்கசாய புனித திரேசாள் ஆலயத்தில் இடம்பெறும்.

## ஈழநாடு செய்திக்கு மறுப்பு!

கடந்த சனிக்கிழமை கூட்டணி செயலகத்தில் (18-12-76) நடைபெற்ற கருத்தரங்கு இடைநிறுத்தப்பட்டதாக ஈழநாடு (19-12-76) இதழில் வெளிவந்த செய்தி தவறானதென்றும், இளைஞர்களின் கேள்விக்கணைகளுக்குத் தலைவர்கள் பதிலளித்த பின்னர், புதிதாக யாரும் கேள்விகள் கேட்காததனால் கருத்தரங்கு முடிவுற்றதாகத் தலைவர் அறிவித்ததாகவும், கருத்தரங்கு முடிவடைந்த பின்பும், தலைவர்கள் அங்கு அரை மணி நேரம் தாமதித்து தங்கியிருந்து இளைஞர்களுடன் உரையாடிய பின்பே விடைபெற்றனர் என்றும் சட்டத்தரணி திரு. வெ. யோகேஸ்வரன் தெரிவிக்கிறார்.

## சனிக்கிழமைக் கருத்தரங்கு

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் சட்டத்தரணி திரு. வெ. யோகேஸ்வரன் தலைமையில் 25-12-76 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு வாராந்தக் கருத்தரங்கு நடைபெறும். "தமிழ் ஈத்தின் சுயநிர்ணய உரிமையும், ஐ. நா. மனித உரிமைகள் சாசனமும்'' என்ற தலைப்பில் திருவாளர்கள் வி. தர்மலிங்கம் பா.உ., திரு. ஆர். விசுவநாதன் ஆகியோரும், "சேர். பொன் இராமநாதன், அருணாசலம் காலம்முதல் மூதறிஞர் செல்வா வரை தமிழர் சிங்களவர் உடன்படிக்கைகளும், ஏமாற்றமும்'' எனும் தலைப்பில் திரு. ஈழவேந்தனும், "உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் நோக்கமும் பணியும்'' என்ற தலைப்பில் குரும்பசிட்டி கனகரத்தினமும் உரையாற்றுவார்கள். அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

## கூட்டணியின் எதிர்கால நடவடிக்கை எப்படி அமையவேண்டும்?

### அ. எ. வி. சங்கம் தீர்மானம்!

'பண்டா—செல்வா ஒப்பந்தம், டட்லி — செல்வா ஒப்பந்தம் ஆகியவற்றுக்குக் கிடைத்த முடிவுகளையும், பதவியில் இருந்த இருக்கின்ற அரசாங்கங்களுடன் இதுவரை நடத்தியபேச்சுவார்த்தைகளின் பலாபலன்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி சிந்திப்பதுடன் — காங்கேசன்துறை இடைத் தேர்தல் முடிவின் பின்னர் மூதறிஞர் செல்வா அவர்கள் நாட்டு மக்களுக்கும் உலகுக்கும் விடுத்த பிரகடனம், வட்டுக்கோட்டை மாநாட்டுப் பிரகடனம், வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போது சென்ற மாதம் தந்தை செல்வா அவர்கள் தெரிவித்த தீர்க்கமான கருத்து, 1976 பெப்ரவரி 4ம் நாள் தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, இன்னும் விவாதிக்கப்படாமலிருக்கும் தமிழ் ஈழத்தீர்மானம், ஆகியவற்றின் அடிப்படையில்—1972 மே 22ம் நாளுக்கு பின்னர், அந்நிய ஏகாதிபத்தியத்தினால் அபகரிக்கப்பட்ட இறைமையை தமிழ்மக்கள் மீட்டுப்பெற்றுக் கொண்டுள்ளனர் என்பதையும் நினைவிற்கொண்டு, தமிழர் விடுதலைக்கூட்டணி தனது எதிர்கால நடவடிக்கைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்!''

இவ்வாறு கூறும் ஒரு தீர்மானத்தை அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின்பொதுச் சபை 18-12-76ல் நிறைவேற்றி மூதறிஞர் செல்வாவுக்கும், கூட்டணியின் செயலதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

## திருவெம்பாவை

2 நீம் வாசனை சோப் அல்லது 2 மெடிக்கேடற் சோப் அல்லது 2 பார்சோப் மேலுறைகளை அனுப்பிவைத்து மேற்படி புத்தகம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

விநியோகப் பகுதி:

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976ம் வருடம் டிசம்பர் மாதம் 22-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org